1978 செப்டம்பர் 12]

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவரவர்களே, இத்திட்டத்தின் அடிப்படையில் உயர்ந்தபட்சம் எவ்வளவு கொடுக்கப்படும் ? அதோடு, என்னுடைய காங்கேயம் தொகுதியில் கால்நடைகளின் மதிப்பு மிக அதிகமாக இருக்கிறது ; ஒரு ஜோடி மாடு சுமார் 10,000 ரூபாய் கூட விலை போகும் ; ஆகவே கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டத்தையும் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இத்திட்டத்தின் கீழ் உழவர் ஒருவர் காப்புறுதி செய்யவேண்டிய அதிகப்பட்சத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 2,000 ரூபாய் என்று வரையறை வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கால்நடைகள் இன்ஷூரன்ஸ் திட்டம் அமலில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையில் கடன்பட்டவர்கள் பெயர் இந்தத் திட்டத்தில் அடங்கும் என்று குறிப்பிட்டார்கள். அதற்கான விளக்கத்தை அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அது பற்றிய விளக்கத்தை படித்துக் கொண்டே போகலாம் ; நேரம் போதாது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விளக்கம் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. மற்ற கேள்விகளுக்கான பதில்கள் நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பெறும்.

திரு. என். கிட்டப்பா : கேள்வி நேரத்தையே நீக்கிவிட்டு, எல்லாவற்றையும் அச்சிட்டுக் கொடுத்துவிடலாமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை அனுமதித்தால் அதையும் செய்யலாம்.

* வடகரை கிராமத்திலுள்ள கரிசல்குளம்.

* வினா எண் 170—திரு. மு. மு. அ. ரசாக்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தாலுகா வடகரை கிராமம் கரிசல் குளத்தை விவசாய முக்கியத்துவம் கருதி விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

*170 முதல் 175 வரையிலான வினாவும் அவற்றுக்கான விடைகளும் பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அச்சிடப் பெற்றுள்ளன.

(ஆ) குளத்திலுள்ள தனியார் இடங்களை அரசுக்குத் தர உரிமையாளர்கள் சம்மதித்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம், என்ருல் எப்பொழுது வாங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—(அ) தென்காசி வட்டம், வடகரை கிராமத்தைச் சேர்ந்த கரிசல் குளம் கண்மாய் மேம்பாட்டிற்கான திட்டங்கள் எதுவும் கிடையாது.

(ஆ) நில உடமையாளர்கள் இக்கண்மாய் கீழுள்ள தங்கள் நிலங்களை அரசுக்குக் கொடுக்க ஒத்துக்கொண்டமை சம்பந்தமாக இத்துறையுடன் ஏதும் கடிதப்போக்குவரத்து இல்லை.

(இ) வினு எழவில்லை.

பெரியப்புலியூர் சாராயத் தொழிற்சாலையின் கழிவு நீர்.

* வினு எண் 171— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி வட்டம் பெரியப்புலியூர் அருகில் கட்டப்பட்டுள்ள எரி சாராயத் தொழிற்சாலையின் கழிவு நீரால் ஆற்று நீர் கெட்டு மக்கள் உபயோகிக்க முடியாமற் போனது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) அதனுல் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர்த்ததால் ஊராட்சி ஒன்றியம் லைசன்ஸ் வழங்க மறுத்ததா ?

(இ) ஆம் எனில், இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : (அ) தெரியும்.

(ஆ) காமதேனு பானம் என்ற தொழிற்சாலை 1976 பிப்ரவரி மாதம் மத்தியிலிருந்து இயங்கவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மேல் சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்.

* வினு எண் 172— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், வல்லம் ஒன்றியத்தைச் சேர்ந்த மேல் சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?